3050

# பண்டைச் சோழ மன்னர்கள்

(முதற் பாகம்)

ஆசிரியர்
கும்பகோணம் அரசாங்கக் கல்லூரி
தமிழ்ப் போதகாசிரியர்
ல. ஸ்ரீநிவாஸ ஐயர்

கும்பகோணம்
லலிதா பிரதர்ஸ் லிமிடெட்

ரிஜிஸ்டர் செய்தது] 1939 [விலை ரூ. 1—0—0

கும்பகோணம்
ஸெண்ட்ரல் பிரஸ் ஸிண்டிகேட் லிமிடெட்
அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

3050

# முன்னுரை

நம் தமிழகம் மிகப் புராதன நாகரிகத்தாற் சிறந்தோங்கிய பிரதேசமாகும். இதனுள், சோழ நாடோ, பெருமை பலவற்றிற்கும் உறைவிடமாய்த் திகழ்ந்த தனிச் சிறப்பு அமைந்தது. இதனை நோக்கியே,

> "தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
> மண்ணாவ துஞ்சோழ மண்டலமே"—

என்றார் ஒரு பெரியார். இச்சோழவள நாட்டின் நன்னிலைக்குக் காரணமாய் நின்றவர்கள்— மன்னர்கள், வீரர்கள், வள்ளல்கள், கல்வியிற் சிறந்த ஆன்றோர்கள், கற்பிற் கருங்கலமாம் பெண்மணிகள் முதலானோர் பலராவர். அன்னோர் உயர்குணங்களையும், சிறப்புககளையும் தெள்ளிதின் விளக்குவதற்கு நம் பண்டைத் தமிழ் நூல்களே முன்னணியில் வைக்கத் தக்கன.

இக்காலம், நம் தேச பாஷைகளுக்கு உரித்தான தனிச் சிறப்பை யளித்து, அவற்றின் மூலம் கல்வியை வளர்ப்பதே நம் சமூக முன்னேற்றத்திற்கு ஏற்ற சாதனமென்ற புத்துணர்ச்சி நம்மவருள் நாளும் பெருகிவருகின்ற தாதலின், இனி, நம் தேச சரித்திரமாம் செங்கதிரும் தன்னைச் சூழ்ந்துள்ள பல மேகப் படலங்களினின்றும் வெளிப்போந்து, தனது இயற்கை யொளியுடன் பிரகாசிக்கு மென்பது நிச்சயம். இந்நோக்கத்தோடு நம் அரசாங்கத்தாரும், புராதன சின்னங்கள் முதலிய வஸ்து சாஸ்திர முறைகளிலும் (Archaeology) சிலாசாஸன (Epigraphy) ஆராய்ச்சிகளிலும் பெரும் பொருள் செலவு செய்து ஆராய்ச்சிசெய்து வருவதினின்றும், நம் நாட்டின் பண்டைப் பெருமைகள் பல வெளியாகி வருகின்றன. அதனால், நம் முன்னோர்கள் எழுதி வைத்துள்ள நூல்களும், சாஸனக் குறிப்புக்களும், கட்டிடங்கள் முதலிய சிற்பச் சின்னங்களும் வெறுங் கற்பி

தங்களென ஒதுக்கற்பாலன அல்லவென்பதும், அவை நம் தேச சரித்திரமாகிய பெருங்கடலில் திளைத்து ஊடுருவி உலாவவெழும் நாவாய்களுக்குக் கலங்கரை விளக்குகள் போல நின்று ஒளிர்வனவாம் என்னும் உண்மையும் புலப் பட ஏதுவாயின வென்னலாம்.

ஆனால், நம் நாட்டுப் பண்டை நூல்களில் சரித்திர வுண்மைக்கு முரண்படுஞ் செய்திகள் சில காணப்படுகின்றனவே யெனில், அவை பல நூற்றாண்டுகளாக அடுத்தடுத்து எழுந்த பல்வேறு சமய வேறுபாடுகளாலும், வகுப்பு வாதங்களாலும் ஏற்பட்ட விபரீத நிகழ்ச்சிகளால் தோன்றினவை யெனக் கொள்ளற் பாலதாம். ஆதலின், சரித்திரத் துறையில் ஈடுபடும் அறிவாளிகளாவார், மேற்கூறியவும் பிறவுமான எவ்விதப் பற்றுக்களிலு முட்படாமல், உள்ளதை உள்ளவாறே ஆராய்ந்து வெளியிடும் உயரிய நோக்கத்தையே மேற்கொண்டு நம் நாட்டுப் பண்டை நூல்களாலும், சாஸனங்கள் முதலியவற்றாலும் கிடைக்கப்பெறும் ஆதாரங்களோடு சமூகப் பெரு வழக்கங்களையுந் தழுவிக் கொள்ளத் தக்கன கொண்டும், தள்ளத் தக்கன தவிர்த்தும சரித்திர நூல்களை யாத்தலே அன்னோர் நம் நாட்டிற்குச் செய்யும் பெரும்பணியா மென்பது ஒருதலை.

இத்தகைய உயரிய நோக்கங்களை மேற்கொண்டே இந்நூல் ஒருவாறு அமைந்துள்ளதென்பது இதனைப் படித்தவர்க்கு நன்கு புலனாகும். இத்தகைய உழைப்பில், பண்டைநூல் பயிற்சியும், ஆராய்ச்சித் திறமையும் அமைந்த இவ்வாசிரியர் மென்மேலும் ஈடுபட்டு மற்றும் பல சரித்திர வுண்மைகளையும், நூற் சிறப்புக்களையும் ஆராய்ந்து வெளியிட்டு நம் தமிழகத்தின் புகழை வளர்ப்பாரென நம்புகின்றேன்.

கும்பகோணம்.
10—4—39

ந. ரா. சுப்பையர்

# நூன்முகம்

நம் தமிழ் மொழியிற் சோழ மன்னர்களது அருஞ் செயல்களாம் சரித நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் பண்டை நூல்கள் பல வுள. அவற்றைப் பல சிலாசாஸனங்களும், செப்பேடுகளும், பிரபந்தங்களும் விளக்குவன காணலாம். ஆனால், சமயச் சார்பை மேற்கொண்டும், அரசியற் கொள்கையைப் பின்பற்றியும் எழுந்தனவான சில தலப்புராணங்களும், பிரபந்தங்களும், சாஸனங்களும் சரித்திரப் போக்குக்குப் பல இடங்களில் மாறுபட்டுள்ளன. ஆதலின், உண்மையை ஆராயும் முறையில், அவற்றுள் பல தழுவியும், சில விலக்கியும் இந்நூல் ஒருவாறு எழுதப் பெற்றது.

இதனுள், குறைகள் சில காணப்பெறலா மெனினும்,

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

என்னும் உறுதியே இம்முயற்சியில் என்னை ஊக்கியதாகும்.

இந்நூலை யெழுதுவதற்குப் பெரிதும் உதவியாய் இருந்தனவென அனுபந்தத்தில் யான் குறிப்பிட்டுள்ள நூல்களை யியற்றியும், வெளியிட்டும் உதவிய அறிஞர்கட்கு எனது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்வதல்லால், அன்னோர்க்கு யான் செய்யக்கூடிய கைம்மாறு வேறு யாதுளது?

எனது விருப்பிற்கிணங்கி இந்நூலுக்கு ஒரு முன்னுரை அன்புடன் எழுதி யுதவிய சரித்திர ஆசிரியர், ஸ்ரீ. ந. ரா. சுப்பையர் எம். ஏ., எல். டி. அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இதனை விரைவில் நன்கு அச்சிட்டுத் தந்த கும்பகோணம் ஸெண்ட்ரல் பிரஸ் ஸிண்டிகேட் லிமிடெட் கழகத்தாருக்கு எனது நன்றி பாராட்டு உரித்தாகுக.

மேலைக்காவேரி
கும்பகோணம்
12—4—1939

இங்ஙனம்,
**L. ஸ்ரீநிவாஸன்**

# பொருளடக்கம்


I. தோற்றுவாய்:- தமிழகமும், சோழர் குலமும்


II. புராணகால மன்னர்கள் பக்கம்.

1. முசுகுந்த சோழன் ... ... 8
2. மனுநீதிச் சோழன் ... ... 26
3. சிபிச் சோழன் ... ... 40
4. தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன் ... 52
5. காந்தமன் அல்லது காவிரிச் சோழன்... 57

III. சங்ககால மன்னர்கள்

1. சோழன் கரிகாற் பெருவளத்தான் ... 67
2. கிள்ளிவளவன் ... ... 88
3. கோப்பெருஞ் சோழன் ... ... 98
4. புகழ்ச்சோழ நாயனார் ... ... 107
5. சோழன் செங்கணான் ... ... 116

IV. அனுபந்தம் ... ... 132



# பண்டைச் சோழ மன்னர்கள்

## தோற்றுவாய்

## தமிழகமும் சோழர் குலமும்

பூவிமங்கையின் திருமுகமென்னச் சிறப்புற்றிலங்கும் நம் பரதகண்டத்தின் தென்பால், வடக்கே வேங்கடமென்னும் ஓங்கிய வெற்பும், மற்ற மூன்று புறங்களிலும் கடல்களும் எல்லைகளாக அமையப்பெற்று விளங்கும் நிலப்பரப்பே, தமிழகம் என்று வழங்கப்பெறும் நம் செந்தமிழ் நாடாகும்.

இத்தமிழகம், காலவரையறை கொண்டு கணக்கிடுதற்கொண்ணாத மிகப் புராதனகாலத்தே, இப்பொழுது உள்ளது போலல்லாமல், தெற்கேயுள்ள இந்துமகா சமுத்திர மென்னும் பெரிய நீர்ப்பரப்பின் பெரும்பகுதியையும் தன்னிடமாகக்கொண்டு பரவியிருந்ததோடு, வடக்கேயும் விந்தமலைத் தொடரினை எல்லையாகக் கொண்ட ஒரு பெரும் நிலப்பகுதியாக விரிந்து விளங்கிய தென்பது, நிலநூல், வானநூல், உயிர்நூல் முதலிய துறைகளில் ஆராய்ச்சியில் வல்ல அறிவாளர்களின் துணிபாகும்.

இத்தகைய விரிந்த நிலப்பரப்பினையுடைய தமிழகத்தின் தென்பாகம் முன்னொருகால் கடல் கொள்ளப்பட்டு அழிவுற்றதென்பது, பண்டைத்தமிழ் நூல்களாகிய

சிலப்பதிகாரம், கலித்தொகை முதலியவற்றாலும், இறைய னாரகப்பொருள், தொல்காப்பியம் என்னும் நூல்களின் உரை களிற் காணப்படுங் குறிப்புக்களாலும் அறியப்படுவதாகும்.

மேலும், வடபால் விந்தமலை வரையினும் பரவியிருந்த இத்தமிழகத்தின் பற்பல பகுதிகளில் வழங்கிவந்த தமிழ் மொழி காலப்போக்கிற் செந்தமிழ் மொழியினின்றும் வேறுபட்டு, ஆரிய வடமொழியின் நடையைப் பெரிதுந் தழுவி, ஆங்காங்கு மராடம், வடுகு, கன்னடம், துளுவம் என்னும் பெயர்களுடன் தனித்தனி மொழிகளாகமாறி இயங்குவதாயிற்று. அதனால், அவ்வவ்விடங்களில் வாழ்ந்து வந்த பண்டைத்தமிழ் மக்களும், நாளடைவில் மொழி, நடை யுடை முதலியவற்றால் மாறுபட்டு, வெவ்வேறு இனத்தவர் கள் போலத் திகழ்வராயினர் என்பது, மொழிநூற்றுறை களில் வல்ல அறிஞர்களாலும், சரித்திர ஆராய்ச்சியில் ஈடு பட்ட மேதாவிகளாலும் துணியப்பெற்ற உண்மையாகும். இவ்வுண்மை இற்றைக்கு மூன்று அல்லது நான்கு நூற் றாண்டுகளுக்கு முன்னர்வரையில் தமிழகத்தின் ஒருபகுதி யாக இருந்து, பல அரிய பண்டைத்தமிழ் இலக்கியங் களுக்குப் பிறப்பிடமாகவும் விளங்கிய குட்டநாடு, குடநாடு, மலைநாடு முதலிய தமிழகத்தின் மேற்பகுதி, இக்காலம் வடமொழிப்போக்கைப் பெரிதுந்தழுவி மலையாளம் என்னும் ஒரு தனிமொழி பயிலும் ஒரு தனிநாடு போலவும், அங்கு வாழும் மக்கள் தம் பழக்க வழக்கங்களாலும், நடையுடை முதலியவற்றாலும் தமிழ்மக்களி னின்றும் வேறுவார் போலும் விளங்குவது நாம் கண்கூடாகக் காண்கின்றோ மன்றோ? இயற்கையின் போக்கை எவ்வெனன் றெடுத் துரைப்பது!

காலச்சுழற்சியின் இயல்பினால், இத்தமிழகம் இத்தகைய மாறுபாடுகள் பலவற்றிற் குள்ளாகவே, பல்லாயிர மாண்டுகளுக்கு முன்னரேயே, அதாவது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் தோன்றிய காலத்திற்கு முற்பட்டே தனது பரந்த பண்டை யெல்லையிற் குறைந்து முற்கூறியவாறு, வடக்கே வேங்கட வெற்பையும், மற்ற மூன்று புறங்களிற் கடல்களையும் எல்லைகளாகக்கொண்டு அமைவதாயிற்று. மலையாளம் தனிமொழியாகப் பிரிந்த இக்காலத்திலோ, தமிழ்நாடு அதனினும் பரப்பிற் குறைந்து விளங்குவது வெளிப்படை.

இத்தமிழகம், கால வரையறைப்படுத்த இயலாத பண்டைக்காலங் கொட்டே, பெரும்புகழுடன் ஓங்கிவந்த, சேர சோழ பாண்டியர்களென்னும், மூன்று மன்னர் மரபினர்களால் ஆளப்பெற்றுவந்தது. அக்காரணம்பற்றியே, இஃது முறையே சேர, சோழ, பாண்டிய நாடுகளென முப்பகுதிகளாக விளங்குவதாயிற்று. இம்மூன்னாடுகளும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்தொடங்கியே, கல்வி, செல்வம், வாணிபம், கைத்தொழில், வெற்றிமேம்பாடு முதலியவற்றால் ஓங்கி, நீர்வளம் நிலவளந் தழையப்பெற்றுக் குடிவளம் நிறைந்து,

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு"

என்னும் பொய்யாமொழிக்கோர் எடுத்துக்காட்டாக விளங்கி வந்தன வென்பது, நமது பண்டைத் தமிழ்நூல்களாலும், முன் நம் பாரத தேயத்திற்கு வந்திருந்து பற்பல இடங்களையும், ஆங்காங்குள்ள சிறப்புக்களையும் நேரிற் கண்டறிந்து சென்ற பிறநாட்டு யாத்திரியர்கள் எழுதிவைத்துள்ள குறிப்புக்கள் பலவற்றாலும் அறியக்கிடப்பதாம்.

இவ்வுண்மையைத், திருக்குறளென்னுந் தமிழ் மறையில் உள்ள,

> " வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
> பண்பிற் றலைபிரித லின்று;"

என்னும் பாவுக்கு உரைவகுத்தருளிய ஆசிரியர் பரிமேலழகர் என்னும் பெரியார், பழங்குடி என்பதற்குத் 'தொன்று தொட்டு வருகின்ற குடி' என்றும், 'தொன்று தொட்டு வருதல்' 'சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலந்தொட்டு, மேம்பட்டு வருதல்' என்றும் விளங்கவைத் தமையால் உணரப்பாலதாம்.

உலகில் ஆதிகாவ்யம் என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்கும் வடமொழி இராமாயணத்தை இயற்றியருளிய வான்மீகி முனிவர், அக்காப்பியத்தில், குரக்கினத் தலைவனை சுக்கிரீவன், இராவணனாற் கவர்ந்து செல்லப்பட்ட இராமபிரானார் தேவியாராகிய சீதாப்பிராட்டியாரைத் தேடி, அவரது இருப்பிடத்தை அறிந்துவரும் பொருட்டுத் தன் வானரப்படை வீரர்களை யேவினகாலை, அக்கவிகுல மன்னன் அவர்களுக்குத் தென்னாடுகளின் இயல்புகளை யெடுத்துக்கூறி அனுப்பியதாகவுள்ள இடத்தில், நம் தமிழகத்தின் பகுதிகளாகிய சேர சோழ பாண்டிய நாடுகளின் பற்பல இடங்களையும், அவற்றின் சிறப்புக்களையும் விளக்கியுள்ளார். அதனால், இராமாவதார காலத்திற்கு முன்னரேயே, அதாவது திரேதாயுகத்திலேயே, நந்தமிழ்நாடு, சீருஞ் சிறப்பு மெய்தி ஓர் உன்னத நிலையில் இருந்ததென்பது விளங்குவது காண்க.

இனி, மகாபாரத காலத்தில் அதாவது இற்றைக்கு ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், சேர சோழ பாண்டி மண்டலங்கள், பல வளங்களா லோங்கி, உலகெங்

ரும் தம் புகழைப் பரப்பிச் சிறப்புற்றிருந்தன வென்பதும், பாண்டவர் ஐவருள் நடுவிற் பிறந்தோனும், வில்லாளர் யாவரினும் மேம்பட்ட வீரனுமான பார்த்தன் புண்ணிய நீர்த்துறைகளிற் படிவான் நந்தமிழ் நாடு வந்தகாலை, பாண்டிய மன்னன் புதல்வியான சித்திராங்கதை யென்னுஞ் செஞ்சொல் வஞ்சியை மன்றல் புரிந்து மகிழ்ந்தனன் என்பதும் அறியப்படுகின்றன. மேலும், அப்பாரதப் பெரும் போரில், தமிழ் வேந்தர் மூவரும் ஐவர்க் குற்றதுணைவராய் நின்று அறப்போர் புரிந்தன ரென்பதும் வேத வியாத முனிவர் வகுத்தருளிய வடமொழிப் பாரதக் காப்பியத்தி லிருந்தே தெள்ளிதின் அறியலாம்.

மேலும், உதியன் சேரலாதன் என்னும் சேரர் குலக் குரிசில் ஒருவன் பாண்டவர் படைகளுக்கும், அப்பாண்டவர் பகைவனான சுயோதனன் படைத்திரள் அனைத்திற்கும் அப்பாரதப்போர் தொடங்கிய நாண்முதல் அஃது முடிவுற்ற வரையிலுஞ் சிறிதும் முட்டுப்பாடின்றி, உணவளித்துவந்தா னென்பதும், அதனல் அச்சேரர் கோமானுக்குப் பெருஞ் சோற்று உதியன் சேரலாதன் என்னும் புகழ்ப்பெயர் நிலவு வதாயிற்று என்பதும்,

"அலங்குளைப் புரவி யைவரோடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோறு மிகுபதம் வரையாது கொடுத்தோய்;"

என்று, அந்த உதியன் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாக ராயர் என்னும் புலவர் பெருமான் பாடியதாகவுள்ள புறநா னூற்றுச் செய்யுளால் விளங்குவன நோக்கத்தக்கதாம். மேற் கூறிய உதியன் சேரலாதன் என்பான், கடைச்சங்க காலத்

தில் வாழ்ந்துவந்தவன் என்பதற்குப் பலசான்றுகள் காணப் படுகின்றன. அச்சங்ககாலத்திற்கு ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்ததாகக் கணிக்கப்பெறும் பாரதப்போரில் இருபடைகளுக்கும் அவன் உணவளித் தான் என்பது பொருந்தாது. ஆனால், ஒருவனது முன் னோர் அருஞ்செயலைச் சிறப்பின்பாலாய் அவன் குலத்து வந்த பின்னோன்மே லேற்றிச் சொல்வது கவிமரபாதலின், அம்மரபுபற்றி, சேரலாதன் முன்னோனான ஒரு சேரன், பாரதப்போரில் இருதிறப் படைகளுக்கும் பெருஞ்சோற ளித்ததை அவன்மீது ஏற்றிக்கூறினார் புலவர் எனக்கொள் வது ஒருவாறு பொருத்த முடைத்தாகும்.

மேற்கூறிய பலவகைச் சிறப்புக்களுக்கு இருப்பிடமாய் விளங்கிய நம் தமிழகத்தின் முப்பகுதிகளான சேர சோழ பாண்டிய மண்டலங்களுள் நடுநாயகமாகத் திகழுஞ் சோழ வளநாடு, பொன்னி யென்னுங் கடவுட்டன்மை வாய்ந்த காவிரிநதி பலகிளைகளாகப் பிரிந்து, பரந்து பாயப்பெற்று, எல்லா வளங்களாலு மோங்கி, உலகிலுள்ள பல நாடுகளி னெல்லாம் முன்னாட்டு நாடு என்னும் பெருமைக்கிடமாய் திகழ்ந்த தென்னலாம்.

இப்பொன்னியாடை நன்னிலப்பாவையைப் புரந்து வந்த சோழமன்னர்கள், பானுவின் மரபில் வந்தவரெனக் கருதப்பெறுவர். இதற்கேற்ப அன்னோர், அயோத்திமா நகரைத் தமது அரசியற் றலைநகராகக்கொண்டு வடபுலத் துக் கோசல நாட்டை ஆண்டுவந்த இக்குவாகு, மாந்தாதா, முசுகுந்தன், சிபி முதலிய பரிதிகுல மன்னர் பெருந்தகை யோர்களை யெல்லாம், தம் முன்னோர்களெனத் தமது குலமுறைகளில் வைத்துச் சிறப்பித்துள்ளமை பண்டைத்

தமிழ் நூல்களாலும், செப்பேடுகள், கல்வெட்டுக்கள் முதலிய பழைய சாசனங்களாலும் நன்கு விளங்கும்.

மேலும், இச்சோழர்குல வேந்தர்கள், கற்றோர்களுக்கு உற்றதுணைவர்களாய், அறமுங் கொடையு மோங்க, நீதி முறை பிறழாமல், உலகமுவப்ப ஒருதனிச் செங்கோ லோச்சிவந்தன ரென்பதும், போரிற் புறங்கொடாத வீர வாழ்க்கையில் விளங்கி வந்தனரென்பதும் மேற்கூறிய ஆதாரங்களிலிருந்து அறியலாம்.

இத்தகைய பெரும்புகழ் வாய்ந்த வளவர்குலக் குரிசில்கள் சரித்திரங்களைத் தொகுத்துக் கூறுமிடத்து அத்தொகுதியைப் புராணகாலம், சங்ககாலம், பிற்காலமென முப் பகுதிகளாக வகுத்துக்கொள்வது ஒருவாறு ஏற்புடைத் தாகும். இம்முறைகொண்டு வகுத்துக்கொள்ளுங்கால், ஒவ்வொரு பகுதியிலும், செயற்கரிய அருஞ்செயல் பல புரிந்து, உலகுள்ளளவும அழியாப் பெரும்புகழ் நிறுவிய காவலர் பலருள்ளார். அன்னோர்தம் அரும்பெருஞ் செயல்களையெல்லாம விரிக்கப்புகின், அவை அளவிற் பெருகு மாதலால், மேற்கூறிய முப்பகுதிகளுள் ஒவ்வொன்றிலும் ஒரு சிலர்தம் சரித நிகழ்ச்சிகளையே ஒருவாறு சுருங்கக்கூறும் முறையில் இந்நூல் அமைவதாகும்.

## புராணகால மன்னர்கள்

## 1. முசுகுந்த சோழன்

காவிரி யென்னுங் கடவுண் மாநதி கடலொடு கலக்கும் சங்கமுகம் என்னும் புண்ணியத்துறையை யுடையதும், சம்பாபதி யென்னும் பண்டைப் பெயரினைக் கொண்டதுமான காவிரிப்பூம் பட்டினத்தைத் தனது அரசிருக்கைத் தலைமைத்தானமாகக் கொண்டு, காலவரையறை மூலம் ஆராய்ந்தறிய வொண்ணாத மிகப்புராதன காலத்தில் முசுகுந்த சோழன் என்றொரு வளவர் கோமகன் உலகு புரந்து வந்தனன்.

அவ்வேந்தனே, செங்கோன்முறை மாறாத செம்மனத்தான்; மன்னுயிரனைத்தையும் தன்னுயிரினும் மேலாக மதித்த மாண்பினன்; கல்வி யென்னும் அளக்கரும் அளக்கர் அளந்த அண்ணல்; கற்றவர் தமக்கோர் உற்ற துணைவன்; மறந்தும் புறங்காட்டாத வீர வாழ்க்கையன்; அன்பு ததும்பும் இன்பமொழியினன்; அடைந்தவர் துயரம் அகற்றும் ஆண்டகை; காமனோ குமரனோ என்னுங் காட்சியன்.

இவ்வாறு ஆடவர்க்குரிய அருங்குணங்கள் யாவும் ஒருங்கே யமையப்பெற்ற அவ்வண்ணல் முசுகுந்த சோழன், அறமும் புகழுமோங்க, மானமுங் கருணையும் விளங்கும் அணிகலன்களெனப்பூண்டு, இரு நில மெங்கணும் தனது கொற்றவெண்குடை தண்ணிழல் பரப்ப, தண்டுளவ மாயோன் மணிமார்பம் அகலாது, திருமாது மகிழ்வோ டிருந்தென்னச் செங்கயற்கண் சித்திரவல்லி

யென்னும் கோப்பெருந்தேவி வாழ்க்கைத்துணைவியாய் அருகினிதிருப்ப, வீரசிங்காதனத்து வீற்றிருந்து, உலக முவப்ப ஒருதனிச் செங்கோ லோச்சிவந்தனன்.

அக்காலை, ஒருகால் அமர நாட்டவர்களுக்கும், அவுணர் தமக்கும் வானுலகிற் பெரும்போ ரொன்று எழுந்தது. இச்சோழர் பெருந்தகை முசுகுந்தனது பெரும்புகழும், வெற்றி மேம்பாடுகளும் விண்ணகத்திலுஞ் சென்று பரவியதாதலின், வானவர் கோமான் இந்திரன், இச்சோழர் பெருமான் முசுகுந்தன் துணைநாடி, அத் தைத்தியர்களால் தனக்குற்ற இன்னல் களைய வெண்ணினன். அதனல் அவ்வமரர்க் கிறைவன், தன்னகரைச்சுற்றி முற்றுகையிட்டு வலியுடன் தாக்கிநின்ற, அத்தானவர்கள் அறியாவண்ணம் தனது தெய்வ விமான மூர்ந்து, விண்ணின்றிழிந்து இக் காசினியெய்தி, தண்புகார்ப் பெரும்பதியடைந்து, சோழன் முசுகுந்தன் அவைக்களமணுகி, அக்கோமகன், திருமுன்னர்த் தன் குறையெடுத் துரைத்து அவனைத் தனக்குப் படைத்துணையாமாறு இரந்து கேட்டுக்கொண்டனன்.

வளவர் கோமானும், அவ்விண்ணவர்க் கிறைவன் விருப்பிற்கிணங்கிப் போர்க்கோலம் புனைந்து, அவனுடன் உம்பர் நாடெய்தி, ஆங்கு உழிஞை மேற்கொண்டு அப் பொன்னகரைத் தாக்கிநின்ற வலிய அவுணப்படைகளை எதிர்த்துக் கடும்போர் புரிந்தனன். இச் சென்னியர்கோன் முசுகுந்தன் போர்த்திறமைக் காற்றுத அவ்வவுணர் அநீகங்கள் யாவும் ஊழிக்காற்றி னிடைப்பட்ட இலவம் பஞ் சென உடைந்து சுழன்று ஏகுமிட மின்னதென் றுணராமற் பொருகளம்விட்டு இரியலுற் றோடின.

அலைந்தோடிய அத்தானவர் குழாத்தினுள் எஞ்சி நின்ற தலைமகனொருவன் மானுடனொருவனாற் போரிற் றமது படைகள் வலிகுன்றி அழிவுற்றொழிதல் இழிவைப் பொறுனாய், அச்சோழப் பெருமான் முசுகுந்தன்மீது தனக் குக் கைவந்ததான மாயையின் வன்மையால், காமதாத்திர மென்னுங் கூரிருட் கணையொன்றை யேவினன். அதனால், அக்கணமே அப்பொருகளமெங்கும் ஒரு பேரிருட் பிழம்பு சூழ்ந்துகொண்டது. கருவிகொண்டும் போழ்க்க வொண் ணாத அக்கொடிய அந்தகாரத்தி னிடையே பிணிப்புண்ட அச்சோழர்குலக் கோளரியுஞ் செய்வகை யறியானாய்த் திகைத்து நின்றனன். அந்நிலையில், அமராதிபனால் ஏவப் பெற்று, அப்பொருகளத்தில் அம்மன்னன் அருகிருந்து, அவன் ஏவலின் வழிநின்று, அரும்பணி யியற்றிவந்த குட வயிற்றுக் குறுந்தாட் பூதமொன்று ஓர் அரிய மந்திரத்தை அவ்வேந்தற் குணர்த்தியது. அவ்விஞ்சையின் வன்மை யால் அவுணர் விடுத்த வஞ்சம பெயரவே, அவ்வலிய இருட்படலம் இருந்தவிடந் தெரியாவண்ணம் இரிந்து மாய்ந்தது. அதனால், சோழர் பெருமான் முசுகுந்தனும், கோளரா வாய்நின்றும் விடுபட்டு வெளிவந்த குளிர்மதிய மென்ன ஒளிதழைந்து, முன்னினும் மும்முறை ஊக்கமும் ஆற்றலும் மிக்கோனாகித் தனது குந்தம் என்னுங் கூரிய வேற்படை கொண்டு, எதிர்த்த அவ்வசுரர் குழாமனைத் தையும் சின்னபின்னமாகச் சிதறியோடத் தாக்கியடித் தனன். அதனால், அத்தானவக் குழுவனைத்தும் ஓடியொளி யவே, தமிழர் பெருமான் முசுகுந்தன் வானவர் புகழ வாகைமிலைந்து விளங்கினன். விண்ணவர்கோமானை முன் னிட்ட அமரநாட்டினர் அனைவரும் நம் சென்னியர் சென் மலைச் சூழ்ந்து கற்பக மலர்மாலை சூட்டிப் பல புகழ்மாலை புனைந்து பாடி மகிழ்ந்தனர்.

பின்னர், தேவர்கோமான் வாசவனும், தனக்குற்றுழி யுதவிய அச்சோழர் பெருந்தகை முசுகுந்தனுக்கு முகமன் பலகூறிப் பலவகைச் சிறப்புக்கள் செய்து அவனை மகிழ்வித்தனன். மேலும், அவ்வமராதிபன், தனக்கு அவ்வேந்தன் புரிந்த பேருதவிக்குக் கைம்மாறாக, அப்போரில் அவனுடனிருந்து அரும்பணியியற்றிவந்த அப்பெருவயிற்றுக் குறுந் தாட் பாரிடத்தை, அக்கோமகனுடன் பூவுலகேகி அங்கு அவனுக்கு மெய்காவலாக இருந்து, அவனிடம் ஏவல் புரிந்து வருமாறு பணித்தனன். அவ்வாறே அக்கடுந்திறற் கூளியும், உம்பருலகை விட்டு முசுகுந்தனுடன் புவி யடைந்து, பூம்புகார் வளம்பதியி னிடையே விளங்கிய நாளங்காடி வீதியின் நாப்பண் ஒரு புறத்தே யமைந்த ஒரு பீடிகையிற் றங்கியிருந்து, அவ்வப்போது அந்நகர மாந்தர் அளித்துவந்த அவியுணவு பெற்று அந்நகரைக் காத்துவந்தது. இச்செய்தி, சிலப்பதிகாரம் புகார்க்காண்டம் கடலாடுகாதையில்,

''கடுவிசை யவுணர் கணங்கொண் டீண்டிக்
கொடுவரி யூக்கத்துக் கோநகர் காத்த
தொடுகழன் மன்னற்குத் தொலைந்தன ராகி
நெஞ்சிருள் கூர நிகர்த்துமேல் விட்ட
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்
திருந்துவே லண்ணற்குத் தேவ னேவ
இருந்து பலியுண்ணு மிடமுங் காண்மேம்;''

என்னும் அடிகளாலும், இந்திர விழவூரெடுத்த காதையில்,

''வெற்றிவேன் மன்னற் குற்றதை யொழிக்கெனத்
தேவர் கோமா னேவலிற் போந்த
காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை;''

என்பதாலும் ஆசிரியர் இளங்கோவடிகள் விளக்கிப்போந் தமை காண்க.

இனி, ஒரு சமயம் புள்ளரசாகிய கலுழதேவன் தன் தாயாகிய வினதை யென்பாளைச் சிறைவீடு செய்யக்கருதி, அமராதிபன் தன்னகரில் மிக்க காவலின் வைத்திருந்த பாற்கடலிற் றோன்றிய தெய்வ அமிழ்தினை வலிதிற் புகுந்து கவர்ந்தேகினன். அதுகண்ட வாசவன் அத்தெய்வ உணவை மீட்டுக் கொணர்வான் அவ்வயினதேயனைத் தொடர்ந்தேகிய காலை, அத்தேவர்க் கிறைவன் விருப்பிற் கிணங்கி, அவன் அவ்வமுதினை மீட்டுவந்த அளவும் நம் முசுகுந்தசோழன் அப்பொன்னகரைக் காத்துவந்தன னென்று, மேற்கூறிய சிலப்பதிகாரத்திற்கு உரை யியற்றி யருளிய அடியார்க்குநல்லார் என்னும் பெரியார் கூறி, அதற்கு வேறொரு மேற்கோளுங் காட்டியிருக்கின்றனர். ஆனால், வயினதேயன் அமுதங் கவர்ந்தேகிய செய்தி முசு குந்தன் முன்னர் இயற்றியதாக உள்ள தேவாசுர யுத்தத் திற்குப் பின்னரோ, அல்லது முன்னரோ நிகழ்ந்ததாக இருத்தலுங் கூடும். அவை தெவ்வாறாயினும், முசுகுந்தன் வானுல கேகி, வலிய தானவர்களுடன் பொருது, அமரா பதி மீட்டதான மேற்கூறிய வீரச்செயலைப் பெரிதும் பாராட்டி வடமொழிக் காப்பியங்களும், புராணங்களும், மற்றும் பல தமிழ்நூல்களும் தெளிவாகக் கூறியுள்ளன. அவற்றுள், தமிழ்நூல்களிற் காணும் மற்றுஞ்சில ஆதாரங் கள் பின்வருவனவாம்.

1 * * * "வான்பதி தன்னுட்
கோடித்தேர்த் தானைக் கோற்றவன் றுயரம்
விடுத்த பூதம்;"

(மணிமேகலை. விழாவறைகாதை)

2 "பொருதுறைத் தலை புகுந்துமுசு குந்த னிமையோர்
புரமடங்கலு மரண்செய்து புரந்த புகழும்;"

(கலிங்கத்துப்பரணி. இராசபாரம்பரியம்)

3 * * *— சோருந்
துயில்காத் தரமகளிர் சோர்குழைகாத் தும்பர்
எயில்காத்த நேமி யிறையோன்;"

(குலோத்துங்க சோழனுலா)

4 "போக புலிபுரந்த பூபதியும்;"

(விக்கிரம சோழனுலா)

இனி, இதிகாச புராணங்களிலிருந்து, இம் முசுகுந்த சோழனது வரலாறுகள் அறியப் பெறுவன பலவுள. அவற்றுட் சில கூறுவாம்.

கல்வியிற் பெரியாரும், கவிச் சக்கரவர்த்தியுமான தெய்வப் புலமை ஆழ்வார், ஸ்ரீ கம்பநாடர், நம்மனோ ருய்ய நம் தமிழ் மொழியிற் றும் இயற்றியருளிய இராமா வதாரம் என்னும் பெருங்காப்பியத்தில், பாலகாண்டம் குலமுறை கிளத்து படலத்தில், மிதிலைமா நகரில் சனகர் கோமான் அவைக்களமடைந்த கோசிக முனிவர், தம்மு டன் கூட்டிச்சென்ற தயரத தனயர்களான இராம லக்ஷ மணர்களது, மரபின் மாண்பைத் தொகுத்துக் கூறு முகத்து, அவ்வரசிளஞ் செல்வர்களுடைய மூதாதையர் களுள் ஒருவனான இம்முசுகுந்தனது சிறப்பை,

"மறைமன்னு மணிமுடியு மாரமும்வா ளொடுமின்னப்
பொறைமன்னு வானவருந் தானவரும் பொருமொருநாள்
விறன்மன்னர் தொழுகழலாய் இவர்குலத்தோன் விற்பிடித்த
அறமென்ன வொருதனியே திரிந்தமரா பதிகாத்தோன்;"

என இவ்வேந்தன் அவுணர்களுடன் பொருது அமரர் நாடுமீட்ட மேற்கூறிய அரும்பெருஞ் செயலினைச் சுருங்கக் கூறி விளங்கவைத்தமை காணலாம். இட்சுவாகுகுல முசுகுந்தனும், இச் சோழர்குல முசுகுந்தனும் ஒருவனே யென்ற கொள்கை முன் நான்முகத்திலேயே விளக்கப் பட்டமை அறிக.

விஷ்ணு புராணத்திலும், பாகவத புராணத்திலும் இந்த முசுகுந்த மன்னன் விஷயமாய்க் காணப்பெறுஞ் செய்தி:—

முசுகுந்த சக்கரவர்த்தி, தேவர்க்கும் அவுணர்க்கும் இடையே நிகழ்ந்த பெரும்போரில், அமரர்க்கரசன் விரும்பிற்கிணங்கி விண்ணுலகெய்தி, அங்கு எதிர்த்த தானவர் குழுவினைத் தனது குந்தம் என்னுங் கூரிய நெடும்படை கொண்டு தாக்கிச் சமரில் அன்னோரைத் தோற்றோட வடித்து, அத் துறக்க நாட்டை மீட்டு, இந்திரற்கு அளித்து வெற்றி மாலை புனைந்து விளங்கினன். சுராதிபனும் தனக் குற்றுழி யுதவிய அவ்வேந்தனுக்குக் கைம்மாறியாற்றுங் கடப்பாடுடையோனாய், அவ்வண்ணலை நோக்கி, "மன்னவரேறே! நீவிர் எனக்குச் செய்த இவ்வுதவியை யான் பெரிதும் மதிக்கின்றேன். இவ்வரிய நன்றியை யான் என்றும் மறப்பேனல்லேன். நீவிர் விரும்புவதான எதைக் கேட்பினும் அதனை யான் உவந்தளிப்பேன்" எனப் பரிந்து கூறினன்.

முசுகுந்தனும் அவ் வாகண்டலனை நோக்கி, "தேவர்க் கிறைவ! யான் பலகாலம் உறக்கமின்றி இங்கு இப்போர் முனையில் உழன்று நின்றேனாதலின், எனது யாக்கையும் மனமும் பெரிதுந் தளர்வுற்றுள்ளன. ஆதலின், இவ்

யயர்ச்சி தீரச் சிறிது மிடையூறின்றி, அமைதியுடன் யான் ஓரிடம் தனித்திருந்து உறக்கங் கொள்ளும் வண்ணம் வர மருள வேண்டுகின்றேன்'' என மொழிந்தனன். வலாரியும் 'அங்ஙனமே யாருக' என மனமுவந்து வரமளித்ததோடு, 'நீவிர் பூதலமெய்தி மற்றோர் கட்புலப் படாதவாறு ஒரு வெற்பின் முழைஞ்சினிற் புக்கு ஆங்குத் துயில் கொள்வீ ராக!' அங்ஙனம் நீ துயில் வதியுங்கால், நும்மை அவ்வுறக் கத்திற்குத் தடையாக வந்து எழுப்புவோன் யாவனேயாகி னும், அன்னோன் உமது நோக்கிற் கெதிர்ப்படும் அக்க ணமே எரிந்து சாம்பராய் வீழ்ந்து அழிவானாகுக!' என்று உறுதி கூறி யருளினன். அவ்வரம்பெற்ற முசுகுந்தன் புவியை யடைந்து பிறர் விழிப்புலப் படாவண்ணம் ஒதுக் கிடமான ஒரு பருப்பத முழைஞ்சினை நாடி, அதனுட்புக் குப் பல காலம் அயர்ந்து உறக்கமேற் கொண்டிருந்தனன். இவ்வாறு ஆண்டுகள் ஆயிரககணக்கிற் பல கடந்தன.

இஃது இங்ஙனமாக, யவன நாட்டிற் கிறைவனான காலயவனன் என்பா னொருவன் ஆற்றன்மிக்க ஒரு பெரிய மிலேச்சப் படையுடன் வந்து, கண்ணபிரானார் அரசு வீற்றிருந்த வடமதுரை யென்னும் அணிநகரைச் சூழ்ந்து, முற்றுகையிட்டுத் தாக்கத் தொடங்கினன். அந்த யவன வீரனது செயலை முன்னரே யுணர்ந்த யதுகுலக் குரிசி லும், முசுகுந்தனுக்கு மீளாப் பெருவாழ்வளிக்கவும், அவ் யவனனை மாய்க்கவுங் கருதி, அம்மதுராபதியிலிருந்த குடிகள், பரிசனங்கள், தமராவார் அனைவரையும், துவரை யம்பதிக் கேகுமாறு செய்து, அந்நகரிற் றும்மட்டுந் தமிய ராய்த் தங்கியிருந்தனர். அதுகண்ட அக்காலயவனன் கேசவரை எளிதிற் பிணித்துச் சிறைப்படுத்துவான் றொடங்கவே, வாசுதேவர் அவனுக்கு அஞ்சினாற்போல

நடித்துக் கையிற் படைக்கல மொன்றுமின்றி, அந்நகரை விட்டு வெளிப்போந்து ஓடுவாராயினர். அதனைக்கண்ட அவ்வீரனும் அவரைப் பின்பற்றித் தொடர்ந்தனன். கோவிந்தரும் விரைந்தோடி ஒரு காட்டினை யடைந்து, ஆங்கு இலங்கிய ஒரு பருப்பதத்தினை யடைந்து, அதனில் ஒருபுறத்தே முசுகுந்தன் துயில் வதிந்திருந்த முழையி னுட்புக்கு மறைந்தருளினர். அவரைத் தொடர்ந்துசென்ற யவனர்தலைவனும், விடாது பின்பற்றி அவ்வெற்பின் குகையினை யெய்தி, அதனுட் புகுந்து உற்று நோக்குழி, ஆங்கொரு புறத்தே முசுகுந்தன் அயர்ந்து உறக்கத் துள் ஆழ்ந்து கிடந்தமைகண்டு, நந்தகுமாரரே தனக் கஞ்சி அவ்வாறு மாறுவேடம் புனைந்து பொய்த் துயில் புரிவதாகக் கருதி, வெகுளிமேற் கொண்டு கண்ணிற் தீப்பொறி சிதற, அன்னோனைத் தனது காலால் எட்டி யுதைத்தனன். யவனனது அக்கொடுஞ் செயலாற் றனது நெடிய உறக்கஞ் சிதையவே, துணுக்குற் றெழுந்த முசுகுந்தன் தன்னெதிரே அவ்யவனன் நிற்கக் கண்ட னன். அவன் கட்புலப்பட்ட அக்கொடியோன் அக்கணமே கடுங்கனலாற் கதுவப்பட்டு, நீறாய் நிலத்து வீழ்ந் தழிந்தனன்.

அதுகண்ட கருணைத் தடங்கடலாம் கடல்வண்ண ரும், பேருறக்கத்தினின்றும் விழித்தெழுந்த அம்முசுகுந் தன் முன்னர்ப் புன்னகைத் தவழுந் திருமுக மண்டலத்து டன் ஐம்படை யேந்தி யழகுற நின்றனர். அக்கோமானும் அப்பெருமானார் கருணாயிறுபோன் றொளிர் திருமேனியை கண்ணும் மனமு முவப்பக்கண்டு, கண்ணநீர் தன்னுட லில் மஞ்சன நீராய் வழிந்தோட நின்று, சென்னிமேற் குவித்த செங்கரத்தினனாகித் தனக்கு இன்னருள் சுரக்க

3050



ளிவந்த அந்த ஆதிமூலப் பரம்பொருளைப் பலவாறு நாவீறுபெற வாழ்த்தித் துதித்து நின்றனன். யதுகுல வள்ளலாரும், மீண்டுந் தம்முருக்கொண்டு, அவ்வேந்தனை நோக்கி, "இனி நீ போகபூமியிற் பலகாலம் இன்புற்றிருந்து, பின் நமது உலவாப் பெரும்பதம் அடைவாய்," என இன்ன ருள் சுரந்து மறைந்தனர்.

இனி, திருவாரூர் முதலிய ஏழு விடங்கத் தலபுராணங் கள் இம்முசுகுந்தன் சரித நிகழ்ச்சியாகக் கூறுவது பின் வருமாறாகும்.

முசுகுந்தன் வானவர் கோமான் வேண்டுகோட்கிணங்கி அவுணர்களை யெதிர்த்துச் சமர்புரியவே, அங்கு அப்பொரு களத்தில் அவன் வலன் முதலாக் கொண்ட தானவர் களை யழித்து வாகை மிலைந்தனன். அச்சோழர் பெருமான் உற்றிடத்துதவிய அவ்வருஞ் செயலுக்கு மகிழ்ந்த வானவர்கோன் அவ்வேந்தனுக்கேற்றதொரு கைம்மாறியற் றக்கருதி அம்மன்னனை நோக்கி, "என்னிடமுள்ள எதனை நீவிர் விரும்பினும் அதனை விருப்புடன் அளிப்பேன்," என நவின்றனன். அதுகேட்ட முசுகுந்தன் அலைகடலில் ஆயிர வாய் அரவணையில் அறிதுயில் அமர்ந்த அண்ணல், தமது தண்டுழாய் மாலை இலங்கும் மணிமார்பின் மீதிருத்தி, ஆரா தித்து வந்ததும், பின்னர் அந்த அமராதிபன் அத்திரு மாலைப் பலகால் வழிபட்டுவேண்ட, அவரால் அவனுக்கு அளிக்கப்பெற்றதும், அன்றுதொட்டு நாளும் அவன் உள்ள முவந்து ஆராதித்து வந்ததும், சிவபெருமானது அருட் டிரு வடிவங்களுட் சிறந்ததுமான ஸ்ரீ தியாகராஜ மூர்த்தி யைத் தனக்குத் தந்தருள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனன்.

தேவர்க்கிறைவனே, தான் சிறிதும் எதிர்பாராத அச்சோழர் கோமகனது விருப்பத்தைக் கேட்டுத் துணுக் குற்று, அருட்பெருஞ் சோதியாம் அத்தியாகேசப் பெரு மானைக் கணமும் பிரிந்திருக்க மனந்துணியானாய்ச் செய் வகையறியாது திகைப்புற்றனன். பின்னர், அவ்வமரேசன் ஒருவாறு மனந்தேறி, தன்னேவலின்படி நின்றெழுகும் தெய்வக் கம்மியனை யழைத்து, அவனைக்கொண்டு தான் வழிபட்டுவந்த அத்தியாகராஜ மூர்த்தியைப் போலவே, வேறொரு திருவுரு வமைக்கச்செய்து, அஃதே தான் வழி பட்டுவரும் மூர்த்தியென நம்புமாறு நடித்து அதனை அம் முசுகுந்தற் கீந்தனன்.

ஆனல், அவ்வமர நாட்டினின்றும் நம்மவருய்ய இம் மகிதலத்திற் கெழுந்தருளத் திருவுளங்கொண்ட கருணைத் தடங்கடலாம் அத் தியாகேசப் பெருமானார் திருவருட் குறிப்பால், முசுகுந்தன், வாசவன் தனக்களித்தது உண்மைத் தியாகமூர்த்தி யன்றென்பதை யறிந்து, அவ்வாதி மூர்த்தியே தனக்குத் தந்தருள வேண்டுமென அவ்வமரர் கோனைக் கேட்டுக்கொண்டனன். வானவர்க் கிறைவனே, மனமார அதற்குடன்படாது முன்போலவே மற்றும் ஐந்து முறைகள் ஐந்து வேறுவேறு மூர்த்திகளை நிருமித்துக் கொடுத்தனன். முசுகுந்தன் அந்நிகழ்ச்சிகளின் உண்மை நிலையை அவ்வப்போது தெய்வத்திருவுளால் உணர்ந்து கொண்டானாதலின், மனவமைதி யுறுனாயினன். ஆகலின், அவ்வேந்தர் பெருமான், மீண்டும் அவ்விமையவர் தலை வனை நோக்கி, அவன் தன்னை வஞ்சித்த வகையினை விரித்துக் கூறி, அந்த உண்மைத் தியாகமூர்த்தியையே தனக் களிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனன்.

வானவர் கோமானும், வேறு செய்வகை யற்றோனாய், "அஃதே எம்பெருமான் றிருவுளப்பாங்கு போலும்!" எனக்கருதி, செங்கழுநீர் நறுமாமலர் மிலைந்து, அழகு வீற்றிருந்தென்ன விளங்கும், ஸ்ரீ வீதிவிடங்கத் தியாகேசப் பெருமானையே அம்முசுகுந்தற் கீந்தனன். அதனால் மகிழ்வுற்ற அக்காவலன், அந்த வீதிவிடங்கப்பெருமானையும், வாசவன் முன் தெய்வக்கம்மியனால் அமைத்துத் தனக்குக் கொடுத்தருளிய மற்ற ஆறு விடங்க மூர்த்திகளையும் தன்னுடன் கொண்டு உவகைமேற் கொண்டோனாய்ப் பூவுல கடைந்தனன். பின்னர், அவ்வேந்தர் பெருந்தகை, அமராதிபன் ஆராதித்து வந்த அந்த வீதிவிடங்கமூர்த்தியைத் தன்னிடம் பிறந்தோர்க்கெல்லாம் பிறவாப் பெருநிலை யளிக்கவல்ல புனிதத் தானமான கமலையம்பதி யென்னுந் திருவாரூரிற் கமலாலயம் என்னும் பூங்கோயிலில் எழுந்தருளச் செய்து, மற்ற ஆறு மூர்த்திகளைத் திருநாகை, திருநள்ளாறு, திருக்காறுயல், திருக்கோளிலி, திருவான்மியூர், திருமறைக்காடு என்னும் தெய்வத் திருப்பதிகளிற் றாபித்து, நாளும் வந்தனை வழிபாடுகளும், விழாக்கள் முதலியனவும் மிக்க சீருஞ் சிறப்புமாக இயற்றி ஆராதித்து வந்தனன். இவ்வேழு திருப்பதிகளும் சப்தவிடங்க ஸ்தலங்கள் என்று கூறப்பெறும். இதனை,

"சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறுயல் —— பேரான
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்;"

என்னும் வெண்பாவினால் அறியலாம்.

இந்த முசுகுந்தனென்னும் வேந்தர் பெருமான் முயற்சி காரணமாக, ஸ்ரீ தியாகேசப் பெருமான் தேவருலகினின் றும் நம்மவருய்ய இம்மாநிலத்து வந்து, ஆரூரிற்கோயில் கொண்டெழுந்தருளிக் காட்சி யளித்தருளும அழகிய கோலத்தைக் கண்ணாரக்கண்டு தெரிசித்த சைவ சமயாசாரி யருள் ஒருவரும், ஆளுடையடிகள் என்று சிறப்பிக்கப் பெறுபவருமான திருநாவுக்கரசு நாயனார் என்னும் பெரியார், அத் தியாகப்பெருமான் திறத்து ஈடுபட்டுத் தாமருளிய தேவாரத் திருப்பாசுர மொன்றினுள்,

"அயிராவண மேறாது ஆனேறேறி, அமரர்நா
டாளாதே ஆரூராண்ட அயிராவணமே;"

யெனப் புகழ்ந்து பரவுவாராயினர்.

இந்த முசுகுந்த சக்கரவர்த்தியின் தெய்வத் தன்மை யையும், அரும்பெருஞ் செயல்களையும் உள்ளத்திற்கொண்டு சென்ற ஐம்பது ஆண்டுகட்கு முன்னர்த் திருவாவடுதுறைச் சைவ ஆதீனத்துப் புலவர் பெருந்தகையாய் விளங்கிவந்த வரும், சைவத் திருநெறி தழையவும், செந்தமிழ்வளர்ந் தினி தோங்கவுங் கற்பனைக் கருவூலமாய் விளங்குந் தமது செந் தமிழ்ப் பாக்களாற் கடல்மடை திறந்தவாறு பல சைவத் தலப் புராணங்களும், பிரபந்தங்களும், எண்ணிலடங்காப் பலதிறப்பட்ட தனிச் செய்யுட்களும் அருளிய வள்ளலு மான கவிஞர் பெருமான், திரிசிரபுரம் மகாவித்துவான், ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், தாமியற்றியருளிய * திருவாரூர்த் தியாகராஜ லீலை என்னும் நூலில், கடவுள்

* இந்நூல், இம்மகா வித்துவான் மாணாக்கருள் ஒருவரும், அருந்தமிழ் வளர்த்துவரும் அண்ணலுமான, மகாமகோபாத்தியாய,

வணககப பகுதியில், இம்முசுகுந்த வள்ளலேயும் ஒருவராகக் கொண்டு,

"தேமாறிலாப் பைந்துளவோனேடு தேவர்வேந்தன்
ஏமாறிநிற்ப வெளியோமிறு மாந்துநிற்பக்
கோமான் விடங்கப் பெருமானை யிங்குக்கொணர்ந்த
மாமான் முசுகுந்தனை வாழ்த்தி வணங்குவாமே;"

எனப் பாராட்டிப் பரவியதும் படித்து இன்புறப்பால தாகும்.

இனி, புலவர் கோளரியாம் ஒட்டக்கூத்தர் என்பார் இயற்றியதாகக் கொள்ளப்பெறுவதும், செங்குந்தர்க ளென்னுங் கைக்கோளர் மரபினர்தம் விறன்மிக்க அருஞ் செயல்கள் பலவற்றை விளக்குவதுமான, ஈட்டி யெழுபது என்னும் நூலின் வாயிலாய், இம்முசுகுந்தமன்னன் சரிதத் தொடர்பாகக் காணப்பெறுஞ் செய்திகளை ஒருவாறு தொகுத்துக் கூறுவாம்.

ஈட்டி யெழுபது என்னும் நூல், முசுகுந்த சக்கர வர்த்தி மேற்கூறியவாறு, சிவபெருமானது எழுவிடங்கத் திருவுருவங்களை வானுலகினின்றும் புவியிற் கொணர்ந்து நிலைபெறச் செய்து வழிபட்டுவந்த வரலாற்றினைக் கூறுவ தோடு, அந்நிருபன் விஷயமாக, மற்றும் ஒரு செய்தியையுங் குறிப்பிடுகின்றது. அது பின் வருவதாகும்.

முசுகுந்தன் முருகவேளுக்குப் படைத்துணைவர்களா யிருந்து, சூரபன்மா முதலிய கொடிய அசுரர் குழுக்களை

---

• தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர், உ. வே. சாமிநாத ஐயர் அவர் களாற் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

அழித்தவர்களும், செங்குந்தர் மரபினருமான வீரபாகுதேவர் முதலான ஒன்பதின்மரையும், அம் முருகப்பெருமான் திருவருளினால், தன் படைத்தலைவர்களாகக் கொண்டு புவியிலும், வானிலும் உறுபகையொடுக்கி ஒரு தனிச் செங்கோல் நடாத்திவந்தனன். அக்கோமகன், அப்படைத் தலைவருள் தலைமைபெற்ற வீரபாகுதேவர் அருந்தவப் புதல்வியும், பெண்ணி னருங்கலமுமான சித்திரவல்லி யென்னும் நங்கையர்க் கமுதைக் கனலி சான்றாய் வதுவை புரிந்து, அன்னாளுடன் உருவும் நிழலும் போலும், மலரும் மணமும் போலும் ஒருமித்த முறையிலிருந்து, இன்பந் துய்த்து இல்லற வாழ்க்கையை இனிது நடத்திவந்தனன்.

அக்காலத் தொருநாள் அவ்வேந்தர் பெருமான் முசுகுந்தன், அமரேசன் விருப்பிற்கிணங்கித் தன் தேவி சித்திரவல்லியுடன், விண்ணெழு மானமூர்ந்து வானவருலகஞ் சென்று, அமராபதி யென்னும் அணிமாநகரில், சின்னாட்கள் அத்தேவர்க் கிறைவன் அரு விருந்தினனாய் அமர்ந்து, ஆண்டு இனிது வாழ்ந்துவந்தனன். அக்காலை, அத்தேவாதிபன் கோப்பெருந் தேவியான புலோமிசை யென்பாள் சோழர் பெருமாட்டி சித்திரவல்லிபாற் கொண்ட அன்பு மேலீட்டால், தான் தெய்வ வமுதூட்டி நாளுஞ் சீராட்டி இனிது வளர்த்துவந்த, பைம்பொன்னிறத்த ஓர் இன்சொற் கிள்ளையை அவட்கு விருப்புட னளித்தனள். அத்தத்தையைச் சோழமாதேவியும் தான் பெறற்கரிய பேறென மதித்து, அதனைத் தன்னுடன்கொண்டு, தன் அரமனை அந்தப்புரத்தில் அரிய நவமணிகள் பலகொண்டு குயிற்றிய, ஒருதமனியக் கூட்டினுள் வைத்து, அதனுடன் இன்சொற் பயின்று, அதனை நாளுஞ் சீருஞ் சிறப்புமுறப் பாராட்டி அருகூட்டி வளர்த்து வருவாளாயினள்.

அவ்வரிய பொற்கிள்ளையை உலகில் ஒரு மானிடமாது பெற்று மகிழ்வதை யறிந்த தென்றிசைக்கோன் இயமன் தேவி யாமளை யென்பாள் அழுக்காறுற்று, எவ்வாற்றாயினும் அதனைக் கவர்ந்து தன்னிடங் கொணர்ந்து தருமாறு தன் கணவனை வற்புறுத்தினள். அந்தகனோ, முசுகுந்த சோழனால் வானாடு அவுணர்களிடமிருந்து மீட்கப்பெற்றமையும், அம்மன்னனது வலிய வீரச் செயல்களையும், வெற்றிச் சிறப்புக்களையும், ஒப்புயர்வற்ற குண நலன்களையும் தன் தேவிக்கு எடுத்துரைத்து, அவ்வண்ணல்பாற் பிழை படுதல் தகாதெனக் கூறி, அவள் கருத்துக்கிணங்காது மறுத்தனன். ஆயினுமென்! 'கொண்டது விடாமை' என்பது பொதுவாய் மகளிர்க்குள்ள இயல்பாகலின், அக்கூற்றுவன் றலைவி, அவன் உரைத்த நன்மொழிகளையெல்லாம் இன்மொழிகளென ஏற்றுக்கொள்ளாது, அக்கிள்ளையைப் பெறுவதிலேயே பெரிதும் நோக்கமுள்ளவளாய், அதனைக் கவர்ந்து தன்னிடங் கொடுக்குமாறு மிகவும் மன்றாடினள். அதனால் மறலியும் தன் தேவிபாற் கொண்ட பற்றென்னுந் தளையாற் பிணிப்புண்டு, தன் இயல்பினின்றும் மாறி, அவளது கருத்திற்கிணங்கித் தன் தூதுவர் தம்முட் சூழ்ச்சியின் மிக்காளொருவனை யேவி அப்பொற்கிள்ளையைப் பிறரறியாது பற்றிவரச் செய்து அதனைத் தன் தேவியிட மளித்தனன். அவளும் அத்தத்தையைப் பெற்று அகமகிழ் வெய்தினள்.

இங்ஙனமாக, தன்னருகில் அருங் காவலில் வைத்துத் தான் அன்புடன் பாதுகாத்துவந்த பைங்கிள்ளை, காணாமற்போனது கண்ட சோழமாதேவி சித்திரவல்லி, அருந்தன மிழந்தாரைப் போலப் பெரிதுஞ் சோர்வுற்று வருந்தி, அதனைச் சோழர் பெருமானுக்குத் தெரிவித்த

னள். வேந்தனும், அத்தத்தைதயை யிழந்தமையாற் றன் றேவி யுறும் இன்னல் ஒருபுறமிருக்கத் தன் காவன்மிக்க அரண்மனை அந்தப்புரத்திலேயே களவு போனமைக்கு மனம் ஆற்றகில்லானாய், அப்பொற்புள்ளைத் தேடிக்கொணருமாறு, எங்குந் தன் ஒற்றரை யேவினன். அரசன் ஆணையை மேற்கொண்ட அன்னோர், எள்ளுறையு மிடமும் ஒழியாமற் பூவுலகம், வானகம் எங்குந் துருவி நாடவே, அக்கிள்ளை தென்றிசைக் காவலன் றேவியிட மிருந்ததனைக் கண்டு அதனைத் தம் மன்னற் கறிவித்தனர். காலதேவனது அந்த அடாச்செயலைச் செவியுற்ற முசுகுந்தசோழன், அம்மறலிக்குத் தன் பணிமக னொருவன்மூலம், "நீ, இழிதகைமை மேற்கொண்டு, எம்மிடமிருந்து களவிற் கரந்தெடுத்துச்சென்ற அப் பொற்கிள்ளையை மீண்டும் எம்பாற் கொணர்ந்து கொடுத்துப் பிழை பொறுக்குமாறு கேட்டுக்கொள்வதே உனக்குறுதி பயப்பதாகும்" என ஓர் இறுதிக கடிதம் விடுத்தனன்.

சோழர் பெருமான் அனுப்பிய அந்நிருபம் பெற்ற வைவச்சுதன் தான் செய்த பிழைபாட்டினை யுணர்ந்து தன் தலைவியிட மெய்தி, அச்சோழர் கோமகன் உறுதியுடன் விடுத்த செய்தியை யெடுத்துரைத்து, 'அவ்வேந்தனது ஆற்றல் அளவிடற் கரியதாதலின், அக்கிள்ளையைக் கொண்டு போய்க் கொடுத்து நம் பிழை பொறுக்குமாறு அவனிடங் கேட்டுக்கொள்வதே சாலத் தகுதி யுடைத்தாகும்" எனக் கூறினன். ஆனல் 'மூர்க்கனும் முதலையுங் கோண்டது விடா' என்னும் மூதுரைக்கிணங்க, அக் கூற்றுவன் மனைவி அவன் கூற்றினைச் செவியி லேற்றுக்கொள்ளாது, அச்செயலுக் கிசையா ளாயினள். காலனும் காலக்கேட்டின் வயத்தினனாகி, தன் மனைவிபாற் கொண்ட பற்றினல் அவள்

யைப்பட்டு, முசுகுந்தன் விடுத்த செய்தியை மதியாது யாளா விருந்தனன்.

அந்தகன் இயற்றிய அச்செயலை யறிந்த அரசர் பெருந் தகைமுசுகுந்தன், கடுகிய சினத்துடன், தனது தண்ட நாயக னான வீரபாகு தேவனை, ஒரு வலிய படையுட னனுப்ப, அவன் தென்றிசை மேற்சென்று, யமபுரமணுகி அந்நகரை வளைத்து முற்றுகையிட்டு, அங்கு எதிர்த்த அம்முரண்வலிக் கூற்றுவனையும், அவனது தானை வீரர்தமையும் போரில் வெருண்டோட அடித்து, அவனது அரண்மனையைச் சூறையாடி, அப் பொற்கிள்ளையை மீட்டு வந்தனன். அவ்வேந்தனும் அதனைத் தன் தேவியிடம் அளிக்க அவளும் மகிழ்வுற்றனள்.

இந்நிகழ்ச்சியை ஆசிரியர் சயங்கொண்டார் தாமியற்றிய கலிங்கத்துப்பரணி என்னும் நூலில், இராசபாரம்பரியம் என்னும் பகுதியில்,

"காலனுக்கிது வழக்கென வுரைத்தவன்;"

எனக் குறிப்பால் விளக்கியுள்ளமை காணலாம். மேலும், ஒட்டக்கூத்தர் தாம் அருளிய விக்கிரம சோழனுலா, குலோத்துங்க சோழனுலா, இராச ராசனுலா என்னும் மூவருலாக்களிலும் இச் செய்தியை விளக்கிப் போந்தமை அறியப்பாலதாம்.

மேற்கூறிய இந்நிகழ்ச்சி காரணமாகவே, இம்முசுகுந் தனுக்குக் காலகாலச் சோழன் என்றொரு பெயரும் வழங் குவதாயிற்று என்பர்.

இனி, இவ்வளவர் கோமான் முசுகுந்தன் திறத்துச் சரித்திரப் போக்குக்குப் பெரிதும் முரண்படுஞ் சில தலப் புராணச் செய்திகள் ஆங்காங்குக் காணப்படுவன உள. விரிவஞ்சி அவற்றை இங்கு விளக்காது விடுத்தனம்.

# 2. மனுநீதிச் சோழன்

முன்னொரு காலத்திற் சோழநாட்டில் தன்னிடம் பிறந்தோர்க்கு உலவாப் பெருங்கதியும், பேரின்ப வாழ்வு மான முத்திநிலையை யளிக்கவல்ல தெய்வத் திருப்பதி யெனக் கருதப்பெறும் பெருமைவாய்ந்த திருவாரூரைத் தனது அரசிருக்கைத் தானங்களுள் ஒன்றாகக்கொண்டு ஒரு சோழர்குலக் குரிசில் உலகு புரந்து வந்தனன். அக் கோமகன், தன் குடிகளிடத்துத் தாயொத்த அன்பினனாகி, அருள் கனிந்தொழுகும் இன்பமொழி பயின்றும், உற்றி டத் துதவியும், தன் வெண்கொற்றக் குடையின் தண்ணிழல் இருநில வளாகமெங்கணும் பரவ, மனுநீதி மாறாது, ஆட்சி செலுத்தி வந்தமையால், உலகில் அவ்வேந்தனுக்கு மனுநீதிச்சோழன் என்ற காரணப் பெயரே பெயராக நிலை பெறுவதாயிற்று. அவனது ஆட்சியில், பஞ்சம், பிணி, வஞ்சம், களவு முதலிய கொடுங்கேடுகள் காணாவாயின. அந்நாட்டு மக்களும், "அரச னெவ்வழி அவ்வழிக் குடிகள்" என்னும் மூதுரைக்கிணங்கத் தத்தம் நெறியினின்றும் பெயராது அமைதியுடன் வாழ்ந்துவந்தனர். நாட்டிற் பலவளங்களுஞ் செழித்தோங்கின. அதனால், அம்மன்ன வன் புகழ் உலகெங்கும் ஓங்கி வளர்வதாயிற்று.

இத்தகைய உயர்நலம் யாவும் ஒருங்கே யமையப் பெற்ற அவ்வேந்தன் உலகுபுகழ ஒருகோலோச்சி வந்தா னெனினும், அவன் மக்கட்பேறு ஒன்றைமட்டும் எய்த வில்லை. அக்காவலன்,

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு;"

என்னும் ஆன்றோர் உரையின் உண்மையை யுணர்ந்தோ னாதலின், அக்குறை அவன் மனத்தை நாளும் வருத்துவ தாயிற்று. ஆதலின், அம்மன்னவன் புத்திரப்பேறடைய விரும்பி, அறநூல்களில் விதித்தவாறு ஆன்றோர் பலர் தமைத் துணைக்கொண்டு, வேள்விகள் முதலாம் பல அரிய சடங்குகள் புரிந்தமையோடு, தன்குல மூதாதையர்களுள் ஒருவனான முசுகுந்த சக்கரவர்த்தியால் தேவர் கோமான் இந்திரனிடமிருந்து கொணரப்பெற்று, உலகமுய்ய அக் கமலையம்பதிப் பூங்கோயிலில் அரசு வீற்றிருந்தவாறு எழுந்தருளிக் காட்சி யளித்தருளும், தன்குல முதற்தெய்வ மான வீதிவிடங்கத் தியாகேசப் பெருமானென்னும் சிவ பிரானைப் பலநாள் உள்ளன்புடன் வழிபட்டுத் திருப்பணி கள் பலவியற்றிப் பணிந்து வந்தனன்.

அவ்வாறு, சில ஆண்டுகள் செல்வுழி, கருணைத்தடங் கடலாம் அப்பரமன் திருவருளால், அவனது கோப்பெருந் தேவி, வயிறு வாய்ந்து, உரிய பருவத்திற் கோட்கள் நன் னிலைகளில் நின்ற அமயத்து, அப்புரவலன் றனது அறப் பயன் அரும்பிப் பூத்தவாறே போல, ஓர் அழகிய ஆண் மகவை யீன்றனள். அச் சோழர்குலக் காவலனுங் களிப் பெனுங் கடலிற் றிளைத்து, வறியோர்க்கு இருநிதி யுதவி யும், பெரு விழாக்கள் பல இயற்றியும் நாடெங்கும் மகிழ் வெய்தச் செய்தனன். அவ் வேந்தன் தன் குலக்கொழுந்தா யுதித்த அவ்வரசிளஞ் செல்வனுக்கு அக்கமலைத் தியாகப் பெருமான் திருப் பெயரை முன்னிட்டே வீதிவிடங்கன் என்று நாமகரணஞ் செய்வித்தனன். அவ்விளங் கோமக னும், காலையிற்றோன்றுங் கதிரவ னென்னவும், மாலையின் மலரும் மதியமென்னவும், கண்டோர்விரும்புங் கவினுடன் சிறந்து வளர்ந்து, கல்வியிலும் நடையிலும் மேம்பட்டு

விளங்கினான். மைந்தனது எழில்நலத்தையும், கலைத் தேர்ச்சியையும், உயர் குணங்களையுங் கண்ட அவ்வளவா கோன், உலகிற் பெறற்கரிய பெருந்தனம் பெற்றவன் போல அகமகிழ்வுற்று, அத்தனயன்பால் மிக்க அன்ட கூர்ந்து, அவனைச் சீருஞ் சிறப்புமாக வளர்த்து வந்தனன் இவ்வாறு ஆண்டுகள் சில கடந்தன.

வீதிவிடங்கன் என்னும் அச்சோழர்குலக் குரிசிலும் ஆடவருங் கண்டு காமுறும் வனப்பின்மிக்கு, இளமைப் பருவத்து ஓர் ஆனேறென்னவும், ஓர் அடலரியே றென்னவும் விளங்கிய காலத்து, ஒருநாள் தன்குல முதற்கடவு ளான ஸ்ரீ தியாகேசப்பெருமானைத் தெரிசித்து வணங்கிவர விரும்பித் தனது நண்பர் முதலிய பரிசனங்கள் புடை சூழ்ந்துவர, ஓரழகிய தமனிய இரதமீதிவர்ந்து அந்நகர் மாடவீதிவழியே யேகுவா ஞயினன்.

அக்காலை, மறுகூடே சென்ற அம்மன்னவன் மைந் தன் எதிரே, ஒருவரும் எதிர்பாராவண்ணம் ஓராவின் புனிற்றிளங் கன்றொன்று, விரைவிற் றுள்ளிக் குதித்தோடி வந்து, அவ்வரசிளஞ் செல்வன் ஊர்ந்துவந்த தேராழியின் இடைப்பட்டுக் குடர் பிதுங்க நசுக்குண்டு, பதைபதைத்து, அம்மா!வென்று கதறி வீழ்ந்து ஆவி துறந்தது. அச் சேங்கன்றைப் பின்றொடர்ந்துவந்த தாய்ப்பசுவும், அவ் விட மணுகி, அக்கன்றினுக்குற்ற கேட்டினை யறிந்து, அத னைப் பன்முறை முகர்ந்து முகர்ந்து புறட்டிப் பார்த்து, அஃது ஆவி துறந்தமை யறிந்து, வீரிட்டுக் கதறிக் கண் ணீர் சொரிந்து கலங்கித் தளர்ந்தது. அக்கொடிய நிகழ்ச் சியைக்கண்ட காவலன்மைந்தன் வீதிவிடங்கன், நெஞ்சந் துணுக்குற்று வருந்தி, மயக்கமெய்தித் தானிருந்த அத்

தேர்க் கடத்தினின்றுஞ் சாய்ந்து, உருண்டு தரைமீது விழுந்தனன்; பேச நாவு மெழாமற் கலங்கி மெய் சோர்ந்தனன். பின்னர், உடன்வந்த உழையர் எடுத்துத்தேற்ற, அந்நம்பி ஒருவாறு உணர்ச்சி பெற்றோனாகி, "நினைத்தற்கு மொண்ணாத இக் கொடிய பெரும் பழிக்கு ஆளாகவோ யான் உலகிற்பிறந்து வளர்ந்துவந்தேன்! தீமை தன்பதே செய்தறியாத இச்சோழ பரம்பரையுங் கொடியோனாகிய என்னாற் பெரும் நிந்தனைக் கிடமாயிற்றே! அந்தோ! இக் கொடும் பழியை இனி எவ்வாறு போக்கிக்கொள்வேன்!" என்று கரைந்து உருகித் தவித்தனன்.

இஃது இங்ஙனமாக, கன்றையிழந்த அக்கபிலையுங் கண்ணீர் கலுழப் பேருயிர்ப்புடன் கதறிக்கொண்டு,சோழர் பெருமான் வதிந்துவந்த அரமனையை நாடிச்சென்று,ஆங்கு முன்றிலின் முன்னர் ஒருபோதும் அசைவின்றித் தூங்கிய வண்ணம் அமைந்துநின்ற ஆராய்ச்சி மணியைத் தனதிரு கொம்புகொண்டு புடைத்துப் பேரொலியை எழுப்பியது. அவ்வரிய மணியோசையைச் செவியேற்ற ஆண்டகை மனுநீதிச்சோழன், உருமொலிகேட்ட உரகமென்ன உடல் நடுங்கி, உள்ளந் துளுக்குற்றெழுந்து, விரைந்து வெளியே ஓடி வந்தனன். வந்த மன்னவன், வாயிலினருகே பேருயிர்ப்புடன் கதறிக்கொண்டிருந்த அக்காராவைக் கண்ணுற்றனன். கண்டதும், அப்புரவலன், "மிக்க அமைதியும், தூய்மையும் வாய்ந்த இவ்வாவினுக்கு நேர்ந்த துயரந்தான் யாது கொல்?" என்று அயலில் நின்றோரை நோக்கி வினவினன். நிகழ்ந்தவை அனைத்தையும் முன்னரே யறிந்த அமைச்ச னொருவன், அவ்வேந்தனிடம் உற்றதை உள்ளவாறு ஒளியா துரைத்தனன். அவ்வுரை செவிப்புலனேற்ற அம் மன்னர் பெருமான் மனம்பட்ட இன்னலின் அளவை

என்னென்றுரைப்பது! அவ்வேந்தல், கொடிய ஆலந் தலைக் கேறினாற்போலத் துயரமேற்கொண்டு, ஐயகோ! வென்று வாய்விட் டலறித் தரைமீதுருண்டு சாய்ந்தனன். பின்னர் அககாவலன, "இதுவோ என் செய்வினையின் றன்மை இருந்தவாறு? மைந்தன் நன்னலங்கண்டு, இருநிலத் தென்னிலுஞ் சிறந்தா ரிலரென இறும்பூதெய்தி யிறுமாந் திருந் தேனே! இவனது இச்செய்கை, வெண்ணெய் திரண்டு வருங்காலை, தாழி தகர்ந்த தகைமையாய் முடிந்ததே! இக் கொடிய சிந்தனையை ஏற்கவோ யான் பலகாலம் அருந் தவம் புரிந்து, இவனைப் புதல்வனாகப் பெற்று இதுகாறும் வளர்த்து வந்தேன்?" என்று புலம்பிச் சாம்பினான். எதிரே தன்னிளங் கன்றை யிழந்து, ஏங்கிநின்ற பசுவின் முகத்தை நோக்குந்தோறும், அம்மன்னன் உள்ளம் அழலி னிடைப்பட்ட இழுதெனக் கரைந்து உருகியது.

அரசனது அந்நிலைகண்ட அமைச்சர்களும், மற்று முள்ள ஆன்றோர்களும் அவனையணுகி, "மன்னர் மன்ன! இதன் பொருட்டு நீவிர் இவ்வளவு மனந்தளர்ந்து வருந் துவது தகுதிய தன்று. நம் அரசிளஞ் செல்வனோ, அன்பே ஓருருவெய்தி வந்தாற்போன்ற அருங்குணம் அமையப் பெற்றவன். அவன் மனத்தினாலும் பிறவுயிர்கட்குத் தீமை சிறிதும் நினைப்பவ னல்லன். அச்சேங்கன்று ஊழ்வினை வலிந் துந்தவே, யாவர்கண்ணுக்கும் புலப்படாவண்ணம் மாயமாய் வந்து வீழ்ந்து மாய்ந்தது. இவ்வாறு ஒருவன் வினை பழிக்கிட னாயினேல், அதற்கேற்ற கழுவாய்களும் அறநூல்கள் விதித்துள்ளன. ஆதலின், மனமறிந்து தவ றிழைத்திலாத நம்மிளங்கோவின் றிறத்தும், அவ்வற நூல் கள் அருளிய முறையைப் பின்பற்றி நடப்பதே நாம் செயற்பால தாகு" மென நவின்றனர்.

அன்னோர் மொழிந்த உறுதிமொழிக ளனைத்தையும் ற்றுகேட்ட அக்கொற்றவன், செய்யுமாறின்னதெனத் துணியப் பெறுனாய்ச் சிறிதுநேரம் மயங்கி நின்றனன். ஆயினும் அம் மன்னவன்,

''மனத்தின்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற;''

எனனும் உண்மையை யோர்ந்து, உள்ளத் துணிவு கொண்டு, தன்னெதிரே நின்ற அமாத்தியர் தலைவனை நோக்கி, ''நீ விரைவிற் சென்று, எதிர்வந்த காராவின் இளங்கன்றினை நோக்காமற் பெருமிதமேற்கொண்டு, அதனைத் தன் தேர்க்காலினை விடறிக்கொன்ற கொடுந் தொழில் புரிந்த என் மைந்தனை, அக் கன்று குடர்பிதுங்கி இறந்து கிடக்கும் அவ்விடத்திலேயே, அத்தேர்க்காலின் கீழேயே கிடத்தி, அவ்வாறே அவனும் தன் குடர்பிதுங்கி ஆவி துறக்கும் வண்ணம் தேரைச்செலுத்தி யிடறுவா யாக!'' எனப் பணித்தனன். நாராசங் காய்ச்சி நடுச்செவி புண் ணுழைத்தாற்போன்று, அரயன் மொழிந்த அவ்வா ணையைக் கேட்ட அம்மந்திரத் தலைவன், செய்வகை யறி யனாய் மனம் மாழ்கி மயங்கி நின்றனன். ஆயினும், அம் மதிவல்லான், மறுமொழி யொன்றும் பகருந் துணிவில னாகி, அவ்விடம் நீத்து அயலேயிருந்த ஒரு தனியிட மதனைச் சார்ந்து, வேந்தர் பெருமானிட்ட பணியை நிறைவேற்ற வேண்டிய தனது கடமையைப் புறக்கணிப்பதான தன் குற்றத்திற்குத் தானே தண்டனை விதித்துக் கொள்வான் றுணிந்து, தன்னுடைவாளை யுருவி யோச்சித் தன் சென் னியைச் சிதைத்துக்கொண்டு இன்னுயிர் துறந்தனன்.

அமைச்சர் தலைவனது அச்செயலை யறிந்த அவ்வள வர் கோமான், கட்புலன்களினின்றுந் தீப்பொறிச் சிதற, வெகுளியெழக் கடுகி நடந்து, தானே தன் அருமந்தத் தனயனைப் பற்றி, ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர் ஆகிய அந்நகரமாந்தர் அனைவருங்கண்டு மனம் ஆற்றகில்லாராய்த் தத்தங் கரதலங்கொண்டு விழிகளிற்புடைத்து, அழுதிரங்கி யேங்கிப் பின்றொடர்ந்துவர, அம்மாடவீதியினூடே ஈர்த்துச் சென்றனன். சென்ற மன்னவன், அவ்வான்கன்று இறந்துகிடந்த இடத்தை யண்மி, அக்குமரனை அவனூர்ந்துசென்ற அத்தேர்க்காலின் கீழேகிடத்தி, அவனது குடர்பிதுங்கி வெளிப்பட, செம்புனல் வெள்ளம் பீரிட்டோட, அவனது மணிமார்பின்மீதே அத்தடந்தேரைச் செலுத்தி அவன் ஆவியை மாய்த்தனன். வேந்தனது செயற்கரிய அம்மறச் செயலைக் கண்டாரனைவருங் கண்ணீர் பெருக மெய்ம்மயிர் சிலிர்த்துத் திகைத்துச் செயலற்று நின்றனர்.

ஆனல், அம்மன்னவனே, ஆன்கன்றின் உயிருக்காகத் தன் மைந்தன் உயிரை உதவியதோடமையாது, தானிட்ட ஆணை நெறிப்படாத அக் குற்றத்திற்காகத் தன் ஆருயிரையே போக்கிக்கொண்ட அவ் வமைச்சர் பெருந்தகையின் அருஞ்செயலை வியந்து, அன்னோன் இன்னுயிருக்கு மாமுகத் தன்னுயிரையே யளிக்கக் கருதித் தனது பொன்னுடைவாளை யுருவி யோங்கினன். அந்நிலையில் கருணைப் பெருங்கடலாம் வீதிவிடங்கத் தியாகப்பெருமானார் அம்மனுச் சோழன் முன்னர் அமரர்குழாமும், சிவகணங்களும் புடைசூழ வந்து காட்சி யளித்தருளினர். அக்கணமே, அப் பரமனார் தெய்வத் திருவருளால், இறந்த பசுவின் கன்று, மந்திரி, அரசகுமாரன் ஆகிய மூவரும்

மீண்டும் உயிர்பெற் றெழுந்தனர். அவ்வமயம், தேவ துந்துபி முதலாம் பலவகை இன்னியங்கள் நல்லிசை யெழுப்பின. முனிவர்கள் மறை மொழிகளால் வாழ்த்தொலி யெடுத்தனர். வானவர்கள் ஐந்தருக்களின் மலர்மாரி பொழிந்து அவ்வேந்தனைப் புகழ்ந்து பரவுவா ராயினர். தியாகப்பெருமானும், அக்காவலனது செங்கோன் மாட்சியைப் பாராட்டி, அவன்பாற் பல இன்னருள் சுரந்து, அன்புடன் வாழ்த்தித் தம்முடன்வந்த அமரர் குழாத்துடன் ஆங்கு நின்றும் மறைந்தருளினர்.

மனுநீதிச் சோழனும், நீதிநெறிக் கோர் உறைவிட மென்னப் பின்னுஞ் சிலகாலம் உலகு புரந்துவந்து, தன்னருங் குலமைந்தனும் அவ் வீதிவிடங்கனுக்குத் தன சுடர் மணி மகுடம் உரிமையிற் சூட்டி, அவனைச் சோணாட்டிற் கிறைவனாக்கித் தனது அரசியற் செல்வ மனைத்தையுந் துறந்து, அக் கமலைத் தியாகப் பெருமானர் இணையடிப் போதினை யென்றும் மறவாத மனத்தினனாகி, அருந்தவ வாழ்க்கை மேற்கொண்டு, முடிவில் மீளாப் பேரின்பப் பெருவாழ்வான சிவபத மெய்தினன்.

இவ்வாறு அறநீதி வழுவாது காத்த அண்ணலாகிய இம்மனுநீதிச் சோழனது இம்மாண் சரிதத்தை, நம்மனோர் படித் தின்புற்று உய்யும்வண்ணம், தாமியற்றி யருளிய பெரிய புராணம் என்னுந் திருத்தொண்டர் புராணத்தின் முன்னணியில் வைத்து உபகரித்தருளிய "தொண்டர்சீர் பரவுவார்" என்னுஞ் சிறப்புப் பெயரெய்திய, திருவருட் செல்வராம் சேக்கிழார் நாயனர்,

"ஒருமைந்தன் றன்குலத்துக் குள்ளானனென் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான்;"

என, அம்மன்னனது பெருமையைப் புகழும் வகையறியார் போலப் புகழ்ந்தனரென்றால், அச் சென்னியர் கோமான் மனுநீதிச் சோழனது சிறப்பினை மற்று யாவரே புகழ்ந் துரைக்க வல்லார்?

இனி, ஆவின் றுயர்கண்டு அதனை யாற்றாது, முறை செய்து அறம் நிறுத்திய ஆண்டகை இம்மனுநீதிச்சோழன் செயற்கரிய செயலை, மேற்கூறிய பெரிய புராணத்தினுங் காலத்தான் மிக்க பழமை யெய்தியதும், பண்டைத் தமிழ்ச் சங்கத்து ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றானதுமான சிலப்பதிகாரம் என்னும் நூலில், மதுரைக் காண்டம், வழக் குரைகாதை யென்னும் பகுதியில், ஆசிரியர் இளங்கோவடி கள், அக் காப்பியத் தலைவனான கோவலன் கொலைக்களப் பட்டழிந்ததை அறிந்த கற்பின் அருங்கலமாம அவன் மனைவி கண்ணகி யென்பாள், கரத்தினி லேந்திய செம் பொற்சிலம் பொன்றுடன், கடுஞ்சினங் கதுவப் பாண்டியன் அவைக்கள மணுகித் தன் கணவன் குற்றமற்றவ னென் பதைப் புலப்படுத்திய விடத்து,

> "வாயிற் கடைமணி நடுநா நடுங்க
> ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்றன்
> அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
> பெரும்பெயர்ப் புகாரேம் பதியே;"

எனவும், மேல் வஞ்சிக் காண்டத்தில், வாழ்த்துக்காதையுள்,

> "குறைவில் உடம்பரிந்த கோற்றவன் முன்வந்த
> கறவை முறைசெய்த காவலன்கா ணம்மானை
> காவலன் பூம்புகார் பாடேலோ ரம்மானை;"

எனவும் விளக்கியுள்ளமை அறியப் பாலதாம். மேலும், தமிழெனுஞ் செல்வி அணிமேகலையாம் மணிமேகலை யென்

ழுங் காப்பியத்தில்,பூம்புகார்ப் பதியிலிருந்து உலகு புரந்து வந்த சோழ மன்னன் கிள்ளிவளவன், தன் மைந்தனை உதயகுமாரன் என்னும் இளங்கோ, அக் காப்பியத் தலைவியும், கோவலனுக்கு அவன் காதற்பரத்தை மாதவியிடமாய்ப் பிறந்தவளும், தவநெறி மேற்கொண்டவளுமான மணிமேகலை யென்னும் நங்கையை, வலிதிற் காதலித்து, அதன் காரணமாக ஒரு விச்சாதரனால் வெட்டுண்டிறந்தா னென்பதை அறிந்தனன். அறிந்த அந்த வளவர் கோமான்,தன் புதல்வ னிழைத்த அத்தீவினை தன்போன்ற பிறவேந்தர் தம் செவிப்புலன் புகாமுன்னம், அக்கணமே அவனது உடலை ஈமத்தேற்றி யெரித்துவிடுமாறு பணித்ததாகக் கூறுமிடத்து, ஆசிரியர் மதுரைக் கூலவாணிகஞ் சாத்தனார்,

"மகனை முறைசெய்த மன்னவன் வழியோர்
துயர்வினை யாளன் றோன்றின னென்பது
வேந்தர் தஞ்செவி யுறுவதன் முன்னம்;"

என அச் சோழர்குல முன்னோருள் ஒருவனும் இம் மனுநீதிச் சோழனை வியந்து பாராட்டி விளக்கியுள்ளமை நோக்கத் தக்கதாம்.

மேலும், இம் மனுநீதிச் சோழன் முறைசெய்த இச் செய்தியை,

"சாலமறைத் தோம்பிச் சான்றவர் கைகரப்பக்
காலை கழிந்ததன் பின்றையும்—மேலைக்
கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையு மூர்ந்தான்
முறைமைக்கு மூப்பின்மை யில்;"

எனப் பழமொழி நானூறும்,

"அவ்வருக்கன் மகனுகி மனுமே தினிபுரந்
தரியகாதலனை யாவினது கன்றுகிக ரேன்று
எவ்வருக்கமு வியப்ப முறைசெய்த கதையும்;"

எனக் கலிங்கத்துப் பரணி இராசபாரம்பரியமும்,

* * "—மையல்கூர்
சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரில்
மைந்தனை யூர்ந்த மறவோனும்;"

என விக்கிரம சோழனுலாவும்,

* * "—பார்மேல்
மருளும் பசுவோன்றின் மம்மர்நோய் தீர
உருளுந் திருத்தே ருரவோன்;"

எனக் குலோத்துங்க சோழனுலாவும்,

"தன்மகனுன் கன்றுக்குந் தான்மைந்த னுக்குமேன்றுன்
சேன்மமன்றே சேன்மம் சிவசிவா;"

எனச் சிவசிவ வெண்பாவென்னும் நூலும், இவையன்றி மற்றும் பல தமிழ் நூல்களும் அரசியன் முறைமைக்கு ஓர் ஒப்பற்ற பிரமாணமாகக்கொண்டு விளக்கியுள்ளன காண்க.

இனி,

"இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கும முட்டாச் செயின்;"

என்னுந் திருக்குறட்பாவுக்கு, உரை கூறுமிடத்து, ஆசிரியர் பரிமேலழகர், "முட்டாமற் செலுத்திய வரலாறு மகனை முறை செய்தான் கண்ணும், தன் கைகுறைத்தான் கண்ணுங் காண்க;" என விளங்கவைத்த பெற்றி, படித்து இன்புறப் பாலதாம்.

இச் சரித நிகழ்ச்சியை, இராமலிங்க சுவாமிகள் அருளிய திருவருட்பாத் தொகுதியுள், மனுமுறை கண்ட வாசகம்

மன்னும் வசனப்பகுதியும், தஞ்சை அரண்மனைப் புத்தகாலயத்தும், சென்னை அரசாங்கத்துப் புத்தக சாலையினுமுள்ள ஏட்டுக்கையெழுத்துப் பிரதிகளுட் காணப்பெறும், தேரூர்ந்த சோழன் புராணம், தேரூர்ந்த சோழன் கதை, †தியாகேசர் குறவஞ்சி, கபிலை வாசகம் முதலாம் பல நூல்களும் விளக்குவன காணலாம்.

இச் சோழர்குலக் குரிசில் திறத்தை இதுகாறுங் கூறிப்போந்த நூல்கள் மட்டுமேயன்றி, திருவாரூர்த் தியாகராசப்பெருமான் ஆலயத்தில், மனுநீதிச் சோழன் தன் மைந்தனைத் தேர்க்காலின்கீழ்க் கிடத்தி யூர்ந்தவாறு கல்லிற் செதுக்கி யமைக்கப்பெற்ற உருவச்சிலைகள் இன்றும் விளக்கி இலங்குவன காணலாம். இஃதன்றி, அவ்வாலயத்தின் இரண்டாவது பிராகாரம் வட சுவரிற் பொறிக்கப் பெற்றுள்ள ஒரு பழைய * சாசனமும் இச் சரிதக் குறிப்பை அறிவிப்பதாகும்.

இனி, சோழர் குலமுறைகளை யெடுத்துரைப்பனவும், சங்க காலத்திற்குப் பிற்பட் டெழுந்தவையுமான கலிங்கத்துப் பரணி, மூவருலாக்கள் ஆகிய தமிழ் நூல்களும் அவற்றைப் பின்பற்றிப் பல சிலாசாசனங்களும், செப்புப் பட்டயங்களும் அம் மனுநீதிச் சோழனும், வைவச்சுத மனுவென்னும் வேந்தனும் ஒருவனேயென மயங்கிக் கூறுகின்றன. அக்கூற்று சரித்திரத் தொடர்புக்கு முற்றும் முரண் படுவதாகும்.

---

† இக் குறவஞ்சியிற் காணப்பெறும் மனுச்சோழன் சரிதக்குறிப்பைக் குறிப்பிடும் பகுதி அனுபந்தத்திற் சேர்க்கப் பெற்றுள்ளது.

* தென்னிந்திய சிலாசாசனம். தொகுதி 5. பக்கம் 175. இச் சிலா சாசனக் குறிப்பை அனுபந்தத்திற் காண்க.

திருத்தொண்டர் புராணத்தின் தலைப்பிலுள்ள மனுநீதிகண்ட புராணம் என்னும் பகுதியில், ஆசிரியர் சேக்கிழார் நாயனார், இம் மனுநீதிச் சோழனது சிறப்புக்களைக் கூறுமிடத்து,

> "கோற்றவாழி குவலயஞ் சூழ்ந்திடச்
> சுற்றுமன்னர் திறைகடை சூழ்ந்திடச்
> செற்றம் நீக்கிய செம்மையின் மெய்மனுப்
> பெற்ற நீதியுந் தன்பெய ராக்கினான்;"

என அருளியவாற்றால், இம் மன்னனது முன்னோனாகக் கருதப்பெறும் ஒருவனும், ஆதவன் மைந்தனுமான, வைவச்சுதமனு வென்னும் வேந்தனிடமிருந்து, உலகமடைந்த நீதிகளை இக்காவலன் ஒரு சிறிதும் பிறழாதவாறு கடைப்பிடித்தொழுகினானென்பதும், அக்காரணம் பற்றியே இவனுக்கிட்டிருந்த இயற்பெயர் மறைந்து, மனுநீதிச் சோழன் என்ற புகழ்ப் பெயரே நிலைத்து விளங்குவதாயிற்றென்பதும் தெற்றெனத் திகழ்வன காணலாம். மேலும், இச் சோழ மன்னனது சரிதத்தை விளக்கும் பெரிய புராணத்திலுள்ள அப்பகுதிக்கு, அவ்வாசிரியர் சேக்கிழார், 'மனுநீதி கண்ட புராணம்' எனப் பெயரிட்டமையே இம் மனுச் சோழன் பண்டை மனுநீதியைத் தன் ஆட்சியில் நிலைநாட்டினவனே யாவன் என்பதை உறுதிப்படுத்தும். ஆதலின், மனுஸ்மிருதியென்னும் அந்நீதிநூலை அருளிய வைவச்சுவதமனு வென்னும் வேந்தன், இவனினும் வேறுபட்டோனும், காலத்தால் முற்பட்டவனு மாவான் என்பதும் தெளிவாமாறு காண்க.

மேலும், திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகள் தாமருளிய திருவருட்பாத் தொகுதியின் வசனப் பகுதியில், இந்த மனுநீதிச் சோழனது சரிதத்தை 'மனுமுறை கண்ட வாசகம்' என்னும் பெயர் கொண்டே குறிப்பிட்டுள்ளதும் நோக்கத் தக்கதாம்.